# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 213 | 4 Pages | 5.3.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 213 | 4 பக்கங்கள் | 5.3.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## குடியரசு கட்சி அதிபர் வேட்பாளருக்கான தேர்தல்: நிக்கி ஹாலேவுக்கு முதல் வெற்றி



அமெரிக்கா, மார்ச். 5

அமெரிக்க அதிபர் தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெற இருக்கிறது. ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடன் மீண்டும் போட்டியிட இருக்கிறார்.

அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் வேட்பாளராக நிற்கப்போவது யார்? என்பதற்காக தேர்தல் அந்த கட்சி சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாநிலங்களிலும் தேர்தல் நடத்தப்படும். ஒட்டு மொத்தமாக அதிக செல்வாக்கு பெரும் நபர் அதிபர் தேர்தலில் குடியரசு கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவார்.

தற்போது டொனால்டு டிரம்ப், நிக்கி ஹாலே ஆகியோருக்கு இடையில் நேரடி போட்டி நிலவி வருகிறது. ஏற்கனவே அதிபராக இருந்த டொனால்டு டிரம்ப்க்கு ஆதரவு அதிகமாக இருந்த போதிலும், நிக்கி ஹாலே பின் வாங்காமல் தனது பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் வாஷிங்டன் தேர்தலில் நிக்கி ஹாலே வெற்றி பெற்றுள்ளார். டொனால்டு டிராம்பிற்கு எதிராக நிக்கி ஹாலே பெறும் முதல் வெற்றி இதுவாகும். தொடர்ந்து வெற்றிபெற்று வந்த டொனால்டு டிரம்பிற்கு இது முதல் தோல்வியாக அமைந்துள்ளது.

வாஷிங்டன் ஜனநாயக கட்சியின் கோட்டையாக விளங்குகிறது. இங்கு நிக்கி ஹாலே 63 சதவீத வாங்குகள் வாங்கியுள்ளார். 2020 தேர்தலின்போது வாஷிங்டனில் டிம்பிற்கு எதிராக ஜோ பைடன் 92 சதவீத வாக்குகள் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா, மிச்சிகன், நெவாடா, தெற்கு கரோலினா, லோவா போன்ற இடங்களில் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு 244 பிரதிநிகள் ஆதரவும், நிக்கி ஹாலேவுக்கு 43 பிரதிநிதிகள் ஆதரவும் உள்ளன.

.........................................

## காசாவில் உடனடி போர் நிறுத்தம் தேவை: அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் வலியுறுத்தல்



அமெரிக்கா, மார்ச்.5

ஹமாஸ்க்கு எதிராக போர் பிரகடனம் செய்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. போர் தொடங்கப்பட்டு 5 மாதங்கள் நிறைவடைய இருக்கும் நிலையில், இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

காசாவில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேவேளையில் 100க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காமல் உள்ளது. ஒரு முறை மட்டுமே ஒருவாரம் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அதன்பின் இரு தரப்பிற்கிடையில் போர் நிறுத்தத்திற்கு முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியில் முடியவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் உணவு வாங்க கூடியிருந்த பொதுமக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடனடி போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தினார். மேலும், நிவாரணப்பொருட்கள் அமெரிக்க விமானங்கள் மூலம் வான்வழியாக காசா மக்களுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்த நிலையில் உடனடி போர் நிறுத்தம் தேவை என அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் "காசா மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அங்கு நடக்கும் நிலை மனிதாபிமானமற்றவை. நமது மனிதநேயம் நம்மைச் செயல்படத் தூண்டுகிறது. இஸ்ரேல் அரசு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணியை இன்னும் அதிகரிக்க வேண்டும். இதில் விதிவிலக்கு என்பதே கிடையாது.

உடனடியாக போர் நிறுத்தம் தேவை. பிணைக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆறு வாரம் போர் நிறுத்தம் இன்னும் அதிகமான உதவிப்பொருட்கள் காசா மக்களுக்கு சென்றடைய உதவியாக இருக்கும்." என்றார்.

.........................................

## தயவு செஞ்சு நிப்பாட்டுங்க.. இஸ்ரேல்ஹமாஸ் போரை நிறுத்த போப் பிரான்சிஸ் வலியுறுத்தல்

அமெரிக்கா, மார்ச்.5

காசாவில் நடைபெற்று வரும் போரை நிறுத்துமாறு போப் பிரான்சிஸ் வலியுறுத்தி உள்ளார். மூச்சுக்குழாய் அழற்சி காரணமாக பாதிக்கப்பட்ட போப் பிரான்சிஸ் தற்போது உடல்நலம் தேறி வருவதை அடுத்து இவ்வாறு தெரிவித்துள்ளார். 87 வயதான போப் பிரான்சிஸ், கடந்த புதன்கிழமை ரோம் மருத்துவமனையில் சளி தொந்தரவு காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டார். இதை தொடர்ந்து பிரார்த்தனை கூட்டம் ஒன்றில் பேசிய போப் பிரான்சிஸ், இஸ்ரேஸ் ஹமாஸ் போர் முடிவு குறித்து தனது கருத்தை தெரிவித்தார். இது குறித்து பேசும் போது, "இஸ்ரேல் பாலஸ்தீனம் விவகாரத்தில் தினந்தோரம் பொது மக்கள் பாதிக்கப்படுவது, ஆயிரக்ணக்கானோர் உயிரிழப்பது, படுகாயமடைவது, அகதியாவது உள்ளிட்டவை என் மனதை வேதனையில் ஆழ்த்துகிறது." "இப்படி செய்வதை வைத்து சிறப்பான உலகை கட்டமைக்க முடியும் என நினைக்கின்றீர்களா? உண்மையில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று நினைக்கின்றீர்களா? போதும்! எல்லோரும் சொல்வோம் போதும்! நிறுத்துங்கள்!" என்று தெரிவித்தார். கடந்த சில மாதங்களில் போப் பிரான்சிஸ்க்கு பலமுறை உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதன் காரணமாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் துபாயில் நடைபெற்ற சுற்றுச்சூழல் கருத்தரங்கில் கலந்து கொள்வதை போப் பிரான்சிஸ் ரத்து செய்ய நேரிட்டது. இதைத் தொடர்ந்து ஜனவரியில் சளி தொந்தரவு காரணமாக உரையை முடிக்க முடியாத நிலை உருவானது

# காங்கிரசுக்கு எத்தனை தொகுதி?: முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்திக்க சென்னை வருகிறார் கார்கே

சென்னை, மார்ச். 5

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அடுத்த வாரம் சென்னை வருகிறார்.

சென்னை வரும் கார்கே முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசுவார் என்று கூறப்படுகிறது.

காங்கிரஸ்தி.மு.க. தொகுதி உடன்பாடு காண்பதில் இழுபறி நிலவுகிறது. கடந்த தேர்தலை விட குறைந்த எண்ணிக்கையில் தொகுதிகள் ஒதுக்க தி.மு.க. முடிவு செய்து இருப்பதால் உடன்பாடு ஏற்படவில்லை.

டெல்லி காங்கிரஸ் தலைவர்களும் தி.மு.க. கூட்டணி பேச்சு வார்த்தை குழு தலைவருமான டி.ஆர்.பாலுவும் தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

தொகுதி பிரச்சனையால் இந்தியா கூட்டணிக்கு சிக்கல் வந்துவிடக்கூடாது என்பதிலும் அதே நேரம் தொகுதி எண்ணிக்கையில் பிடிவாதமாகவும் காங்கிரஸ் உள்ளது.

இந்த நிலையில் காங்கிரஸ் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் கார்கே கலந்து கொள்ள ஏற்பாடுகள் நடக்கிறது. இதற்கான இடத்தேர்வு நடக்கிறது.

வருகிற 10ந் தேதியில் இருந்து 15 ந் தேதிக்குள் இந்த கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளார்கள். இந்த கூட்டத்தில் பங்கேற்க வரும் கார்கே முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசுகிறார்.

அதற்குள் தொகுதி உடன்பாடு எட்டப்படும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்திற்கு தமிழகம் முழுவதிலும் இருந்து காங்கிரசார் அழைக்கப்படுகிறார்கள். கூட்டத்துக்கு மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை தாங்குகிறார்.

# தமிழ் மொழியின் பெருமையை ஐ.நா. வரை கொண்டு சென்றவர் பிரதமர் மோடி: அண்ணாமலை புகழாரம்

திருச்சி: மார்ச். 5

இந்திய ஜனநாயக கட்சியின் 'தேசம் காப்போம் தமிழை வளர்ப்போம்' என்ற பெயரில் மாநில மாநாடு திருச்சி சிறுகனூரில் நேற்று மாலை நடைபெற்றது. மாநாட்டுக்கு கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் எம்.பி. தலைமை தாங்கினார். கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து முன்னிலை வகித்தார். பொதுச்செயலாளர் ஜெயசீலன் வரவேற்று பேசினார்.

கூட்டணி கட்சிகள் சார்பில் புதிய நீதிகட்சியின் நிறுவன தலைவர் ஏ.சி. சண்முகம், இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக்கழக நிறுவனர் தேவநாதன், த.மா.கா. மாநில பொதுச்செயலாளர் விடியல் சேகர், காமராஜர் மக்கள் கட்சி தலைவர் தமிழருவி மணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். பா.ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

மே மாதம் 3வது வாரம் மூன்றாவது முறையாக மோடி பதவி ஏற்பார். இந்தியாவில் உள்ள 543 எம்.பி.க்களையும் ஒரே மேடையில் உட்கார வைத்து அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்த பணிகளை புத்தகமாக போட்டுக் காட்டக் கூறினால், அதில் அதிக பணிகளை செய்தவர்கள் பட்டியலில் பாரிவேந்தர் தான் முதலிடத்தில் இருப்பார்.

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி தவிர அவர் சம்பாதித்த பணம் ரூ.126 கோடியை தனது தொகுதியில் கல்விக்காகவும், ஆன்மீகத்திற்காகவும் பொது மக்களுக்காகவும் செலவு செய்துள்ளார்.

ராஜராஜ சோழன் காலத்தில் அவருக்கு எவ்வளவு பெருமை இருந்ததோ அதை மீட்டு எடுக்க வேண்டும். பிரதமர் மோடி செங்கோலை அறத்தின் சாட்சியாக புதிய பாராளுமன்றத்தில் வைத்து ஆட்சி செய்து கொண்டு இருக்கிறார்.

தொன்மையான தமிழ் மொழியை பிரதமர் ஐநா சபை வரை கொண்டு சென்று பெருமை சேர்த்து உள்ளார். அடுத்த 5ஆண்டு காலத்தில் திராவிட கட்சி இல்லாத ஆட்சி தமிழகத்தில் அமையும். தமிழகத்தில் வளர்ச்சி அரசியலை பேசாமல் பிரிவினை அரசியலை பேசுகிறார்கள்.

வடக்கு தெற்கு என்று பிரித்து பேசும் அரசியல் மக்களிடம் எடுபடாது. என்று அப்போதே அண்ணா விட்டு விட்டார். அதை தி.மு.க. தற்போது எடுத்து பிரசாரம் செய்து வருகிறது. 2024 தேர்தல் முடிவில் தி.மு.க. என்ற கட்சி இல்லாத நிலை ஏற்படும். பின் தங்கிய இந்த பெரம்பலூர் தொகுதியில் ரெயில் வசதி வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் கனவை பாரிவேந்தர் மோடியிடம் மத்திய மந்திரிகளிடமும் பேசி வந்துள்ளார்.

இந்த தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்று பாரிவேந்தர் மீண்டும் எம்.பி. ஆகும்போது, அடுத்த பட்ஜெட்டில் பெரம்பலூர் ரெயில் வழி தடத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு அதை அவரே திறந்து வைப்பார். இந்தியா முழுவதும் 100 சைனிக் பள்ளிகளை கொண்டு வருகிறோம். அதில் முதல் பள்ளி பெரம்பலூருக்கு வேண்டுமென்று முதலில் கடிதம் எழுதியவர் பாரிவேந்தர். அத்துடன் அதற்கு இடமும்கொடுத்து கட்டிடமும் கட்டிக் கொடுக்க தயாராக இருக்கிறார். அவருடைய வெற்றி இந்த தொகுதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் எம்.பி. பேசுகையில்,

2014ம் ஆண்டு மோடி குஜராத்தில் ஊழலற்ற ஆட்சி நடத்தி வந்தார். அதன்பின்னர் மோடியுடன் பல மேடைகளில் பொதுக்கூட்டங்களில் பங்கேற்றேன். அப்போது அவரிடம், விரைவில் பிரதமராக ஆவீர்கள் என்று கூறினேன். அதன்படி அவரும் பிரதமர் ஆனார். தமிழன், தன்னை தமிழன் என்று வெளியே கூற தயங்கும் நேரத்தில், தமிழை உலகம் எல்லாம் அவர் பரப்பி வருகிறார்.




# மோடி அரசு தமிழக மக்களை வஞ்சிக்கிறது அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு




செஞ்சி மார்ச் 5

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் வல்லம் மேல்கலவாய் ஊராட்சி தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் அவர்களின் 71ஆவது பிறந்தநாள் விழாவையட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம்வழுதி தலைமை தாங்கினார். வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, தெற்கு ஒன்றிய செயலாளர் துறை ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி பாலசுந்தர் அனைவரையும் வரவேற்றார். வல்ல ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். அப்போது அவர், "முதலமைச்சராக பொறுப்பேற்று 33 மாத கால ஆட்சியில் பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழ் நாட்டில் வளர்ச்சிக்கு இரவு பகல் பாராமல் உழைத்து வருகிறார். தமிழ்நாட்டின் வரிப்பணத்தை சிந்தாமல் சிதறாமல் வீணடிக்காமல் அரசின் கஜானாவுக்கு கொண்டு சென்று பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறார். தமிழ்நாடு ஒன்றிய அரசாங்கம் தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு கொடுக்க வேண்டிய திட்டத்திற்கான தொகையைக் கொடுக்க மறுக்கிறது . ஒன்றிய அரசாங்கம் மாநில அரசுக்கு வழங்க வேண்டிய ரூ.25 ஆயிரம் கோடி நிதியை வழங்காமல் தமிழக மக்களை வஞ்சிக்கப்படுவதாக அவர் குற்றம் காட்டினார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் அவரவர் உழைத்து இந்தியா கூட்டணியை வெற்றி பெற செய்து ஜனநாயகத்தை காப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் வெங்கடேசன் சிவசங்கர் கதிரவன் ராமதாஸ் பாண்டியராஜன் லட்சுமி லட்சுமணன் பழனி கிராம பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# பண்ருட்டியில் சமண துறவிகளுக்கு ஜெயின் சங்கத்தினர் சிறப்பான வரவேற்பு



பண்ருட்டி மார்ச் 5

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் சமண துறவிகளுக்கு ஜெயின் சங்கத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சமண துறவியான ஆச்சார்யா ஸ்ரீ உதயபிரபசூரீஸ் வர்ஜிதனது 8 சீடர்களுடன் தமிழகம் முழுவதும் நடைபயணமாக அகிம்சை உபதேசம் செய்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக இன்று பண்ருட்டி வருகை தந்த சமண சீடர்களுக்கு பண்ருட்டி ஜெயின் சங்கத்தின் மூலம் அவர்களுக்கு கலச அரிசி தூவி சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இதில் ஜெயின் சங்கத்தை சேர்ந்த அசோக், B. ஜெயக்குமார், முகேஷ், Mஇந்து, ஜெயசந்த், Sதர்மேந்தர், ராஜு, Kஜெயக்குமார், ஜிதேந்தர், ஹர்ஷத், கிஷோர், விஷால், ஹரிஷ் மணிஷ், பிரவீன், தினேஷ், ஜெயேஷ் தருண், தேவ், தனிஷ், குஷல் ஷித்தல் மகிளா மண்டல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பண்ருட்டியில் ஜமுனா சர்க்கஸ் நகர மன்ற தலைவர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்



பண்ருட்டி மார்ச் 5

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் 125 வருடம் புகழ்பெற்ற மிகப் பிரமாண்டமாய் ஜமுனா சர்க்கஸ் தொடங்கப்பட்டுள்ளது. இதனை பண்ருட்டி நகர மன்ற தலைவர் ராஜேந்திரன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். நூற்றுக்கணக்கான வெளிநாட்டு கலைஞர்களுடன் ரிங் டோன்ஸ், ரோப் என பல கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. தினமும் பகல் 1 மணி, மாலை 4 மணி இரவு 7 மணி என மூன்று காட்சிகள் நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் சண்முகவள்ளி பழனி, கலைவாணி மதியழகன் இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத், துணை அமைப்பாளர் கிரி, பாலச்சந்தர், ராஜா, ஜமுனா சர்க்கஸ் உரிமையாளர் அக்பர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பண்ருட்டியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு சிறப்பு முகாம்



பண்ருட்டி மார்ச் 5

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு பதிவு சேர்க்கை முகாம் பண்ருட்டி கே.ஆர்.சி சங்கரபாணி செட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பண்ருட்டி நகர மன்ற தலைவரும், திமுக நகர கழக செயலாளருமான இராஜேந்திரன் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தார். உடன் வட்டாட்சியர் ஆனந்தன், சுகாதார அலுவலர் முருகேசன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், நகர மன்ற உறுப்பினர் சீனிவாசன், அருள். கிருஷ்ணராஜ், கழக நிர்வாகிகள், பொது மக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு முகாம் சிறப்பாக நடைபெற்றது.

# பண்ருட்டியில் அங்காளம்மன் கோவில் தீமிதி திருவிழா : பக்தர்கள் தீ மிதித்து நேர்த்தி கடன் செலுத்தினார்கள்



பண்ருட்டி மார்ச் 5

கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆர் எஸ் மணி நகர் பகுதியில் அமைந்துள்ள சுயம்பு ஸ்ரீ அங்காளம்மன் ஆலயத்தில் மாசி மாதம் மயான கொள்ளை, தீமிதி திருவிழா, காப்பு கட்டும் நிகழ்வுடன் துவங்கி மூன்று தினங்கள் கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். இதில் முக்கிய நிகழ்வான தீமிதி திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் பக்தர்கள் காப்பு கட்டிக்கொண்டு விரதம் இருந்து ஸ்ரீ அங்காளம்மன் வேடம் அணிந்து கையில் தீச்சட்டி ஏந்திய படியும் , சக்தி கரகம் தூக்கியபடியும் பக்தர்கள் குழந்தைகளை சுமந்தபடி, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அக்னி குண்டத்தில் இறங்கி தீ மிதித்து நேர்த்தி கடன் செலுத்தினர். இதை தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி பம்பை உடுக்கை முழங்க பக்தி பாடல்கள் பாடியும் பெண்கள் கும்மியடித்து ஆடி படி மாசி மாத மயான கொள்ளை தீமிதி திருவிழா மிக கோலாகலமாக நடைபெற்றது. அப்போது ஏராளமான பெண்களுக்கு அருள் வந்து ஆடியது அங்கிருந்தவர்களை பக்தி பரவசத்தில் ஆழ்தியது. அப்போது ஸ்ரீ அங்காளம்மன் பச்சை நிற பட்டாடை உடுத்தி வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் பண்ருட்டியை சுற்றியுள்ள ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ அங்காளம்மன் அருளை பெற்றனர். .

# பள்ளிக் குழந்தைகளின் உள்ளம் கவர்ந்த உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி





ஒட்டன்சத்திரம் மார்ச் 5

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள வடகாடு ஊராட்சியில் கண்ணனூர், பால்கடை, கோட்டை வெளி, சிறுவாட்டுக்காடு, புலிக்குத்திக்காடு, சுரைக் காய்பட்டி போன்ற பல்வேறு பகுதிகளில் சுமார் 21 கோடி ரூபாய் மதிப்பிலான பயணியர் நிழற்குடை, தரைப்பாலம், நியாய விலை கடை, பள்ளி கட்டிடங்கள் போன்ற பல்வேறு பணிகளுக்கு பூமி பூஜை மற்றும் திறப்பு விழா நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சியர் பூங்கொடி தலைமையில் நடைபெற்றது. இப்பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு திறந்து வைத்தார். இதனிடையே சுரைக்காய்பட்டி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டடத்தை திறந்து வைத்துவிட்டு பின்னர், அமைச்சர் சக்கரபாணி பள்ளி குழந்தைகளிடம் முதல்வரின் காலை உணவு திட்டத்தை பற்றி கேட்கையில், பள்ளிக்குழந்தைகளும் காலை உணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவுகள் பற்றி கூறிய பதில் அமைச்சரை மட்டுமல்ல, அங்கிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பின்னர் அமைச்சர் அக்குழந்தைகளை கைகுலுக்கி பாராட்டி சென்றார். குழந்தைகளும் அவருடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குனர் திலகவதி, கோட்டாட்சியர் சரவணகுமார், வட்டாட்சியர் சசி, மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் போதைப்பொருள் தலைவிரித்து ஆடுகிறது முன்னாள் அமைச்சர் எம்.சி.சம்பத் குற்றச்சாட்டு



கடலூர் மார்ச் 5

கடலூரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க அதிமுக கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னால் தொழில் துறை அமைச்சரும் கடலூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம். சி. சம்பத், மேற்கு மாவட்ட செயலாளர் அருண்மொழி தேவன், கிழக்கு மாவட்ட செயலாளர் பாண்டியன், தெற்கு மாவட்ட செயலாளர் சொரத்தூர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள். அப்போது உன்னால் அமைச்சர் எம் சி சம்பத், "தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக போதைப் பொருட்கள் மிக அதிகமாக உற்பத்தியாகியுள்ளது. இதுகுறித்து பலமுறை எடப்பாடி தலைமையில் மனுக்கள் கொடுத்துள்ளோம். அதை ஆளும் திமுக கண்டுகொள்ளவே இல்லை. இப்போதுதான் அது புரிகிறது. போதைப் பொருட்கள் உற்பத்தி செய்வது திமுக தான் என்று. இதனால் மாணவர்கள் சமூக மேஜீரோ இருந்து வருகிறது. இதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். நெய்வேலியில் புதிய அணுக்கரு உலை அமைக்க திட்டமிட்டுள்ளார்கள். அதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். கடலூர் மாநகராட்சியில் புதிதாக விழித்துள்ள குப்பை வரியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்" என்றார். கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைத்தலைவர் சேவல் குமார் வரவேற்புரையாற்றினார். இதில் மாநில மீனவர் அணி இணைச் செயலாளர் தங்கமணி, மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ஆர்வி ஆறுமுகம்,

மாநில எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் சி கே சுப்பிரமணி, கடலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் காசிநாதன், கடலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அழகானந்தம், அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் நாகபூஷணம் மற்றும் கடலூர் ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாநில, மாவட்ட , ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் ,மகளிர் அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள், என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலூரில் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்




விழுப்புரம், மார்ச். 5

திருக்கோவிலூரில் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் பொன்முடி பங்கேற்று சிறப்புரையாற்றினார்

விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருக்கோவிலூர் நகர ஒன்றிய திமுக சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன் தலைமை தாங்கினார் தெற்கு மாவட்ட செயலாளர் புகழேந்தி எம்எல்ஏ தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றிக்கொண்டான் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் தங்கம் அனைவரையும் வரவேற்றார் இதில் சிறப்பு விருந்தினராக கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றி பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இதில் நகர செயலாளர் கோபிகிருஷ்ணன் தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ் நகர அவை தலைவர் குணா ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர். விசுவநாதன் ரவிச்சந்திரன் பிரபு பிரேமா அல்போன்ஸ் நகர் மன்ற துணைத் தலைவர் உமாமகேஸ்வரி குணா , ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் ஓம்சிவசக்திவேல் தனலட்சுமி உமேஸ்வரன், மணிவண்ணன் பேரூராட்சி மன்ற தலைவர் ராயல் அன்பு, அஞ்சுகம் கணேசன், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி நகர செயலாளர்கள் பூக்கடை கணேசன் சுந்தரமூர்த்தி ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் கோமதி நிர்மல்ராஜ் பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜோதி உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மாவட்ட ஒன்றிய நகர கிளைகழக மற்றும் மகளிர் சார்பு அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியாக நகர மன்ற உறுப்பினர் சக்திவேல் நன்றி கூறினார்

# செவலபுரை கிராமத்தில் புதிய நெல் கொள்முதல் நிலையம்



மேல்மலையனூர் மார்ச் 5

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட செவலபுரை ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான் ஆகியோர் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் ஊராட்சி மன்ற தலைவர் சசிகலா ஜெய்சங்கர், ஒன்றிய கவுன்சிலர் காசி அம்மாள் கோதண்டம், ஒன்றிய அவை தலைவர் ஆவின் ஆறுமுகம் உட்பட ஏராளமான கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரத்தில் நகைக்கடை அதிபரின் வீட்டில் 150 சவரன் நகை கொள்ளை

காஞ்சிபுரம், மார்ச். 5

காஞ்சிபுரத்தில் நகைக் கடை அதிபரின் வீட்டில் 150 சவரன் நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

காஞ்சி விளக்கடி கோவில் தெரு பகுதியில் மர்ம நபர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

நகைக்கடை அதிபர் மகாவீர் சந்த் வீட்டை பூட்டிவிட்டு திருமண நிகழ்ச்சிக்கு சென்றிருந்த நிலையில் கொள்ளை சம்பவம் நடந்துள்ளது.

இதில், 150 சவரன் தங்க நகைகள், ஒரு லட்ச ரூபாய் பணத்தையும் மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

கொள்ளை சம்பவம் தொடர்பாக, விஷ்ணு காஞ்சி போலீசார் வழக்கு பதிவு செய்து கொள்ளையர்களை தேடி வருகின்றனர்.

# பகவதி அம்மன் திருக்கோவில் மாசி பெருந்திருவிழா

கன்னியாகுமரி, மார்ச். 5

மண்டைக்காடு அருள்மிகுபகவதிஅம்மன் திருக்கோவில் மாசி பெருந்திருவிழா கொடியேற்ற நிகழ்ச்சியில் தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், நாகர்கோவில் மாநகர மேயர் மகேஷ், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் பக்தர்கள் பங்கேற்றனர்.

# அரசு பள்ளிக்கூடங்களில் 2 நாளில் 3.31 லட்சம் மாணவர்கள் சேர்ந்தனர்

சென்னை, மார்ச். 5

தமிழகம் முழுவதும் மாணவர்களைஅரசுப்பள்ளிகளில் சேர்ப்பதற்காக பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாணவர் சேர்க்கை இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கடந்த 1ந்தேதி தொடங்கி வைத்தார். அதன்மூலம் கடந்த 1ந்தேதி முதல் அரசு பள்ளிகளில் 20242025ம் கல்வி யாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடந்து வருகிறது. அரசு பள்ளிகளில் மாணவர்களை சேர்ப்பதற்காக பள்ளிகளை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை மையமாக வைத்து இந்த பிரசார இயக்கம் நடத்தப்படுகிறது.



இதன்மூலம் தமிழகம் முழுவதும் கடந்த 2 நாட்களில் மட்டும் 3.31 லட்சம் மாணவர்கள்அரசுப்பள்ளியில் சேர்ந்துள்ளனர். சேலம் மற்றும் மதுரையில்அரசு பள்ளிகளில் சேர அதிகம் பேர் ஆர்வம் காட்டினார்கள். இதில் அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் மட்டும் அரசு பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 19,242 மாணவர்கள் சேர்ந்து சாதனை படைத்துள்ளனர்.

இதையடுத்து மதுரையில் 18,127 மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். திண்டுக்கல்லில் 17,036 மாணவர்களும், திருவள்ளூரில் 15,207 மாணவர்களும், திருவண்ணாமலையில் 13,679 மாணவர்களும், திருப்பூரில் 13,204 மாணவர்களும் அரசு பள்ளிக்கூடங்களில் சேர்ந்துள்ளனர்.

சென்னையை பொருத்தவரை 13,135 மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். சென்னை மாதவரத்தில் 1,568 மாணவர்களும், சிந்தாதிரிப்பேட்டையில் 1,058 மாணவர்களும், ஆலந்தூரில் 1,220 மாணவர்களும், ராயபுரத்தில் 1,298 மாணவர்களும் அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.

# அனைத்து வரிகளையும் வாங்கி கொண்டு தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் மத்திய அரசு கொடுப்பதில்லை கனிமொழி

தஞ்சாவூர், மார்ச். 5

தஞ்சை மத்திய மாவட்ட, மாநகர தி.மு.க. சார்பில் இல்லந்தோறும் ஸ்டாலின் குரல் என்ற தலைப்பில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, தமிழக அரசின் 3 ஆண்டுகால சாதனை, பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் தஞ்சாவூர் ஆப்ரஹாம் பண்டிதர் சாலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. பேசியதாவது :




முன்னாள்முதலமைச்சர் கருணாநிதி செய்த சாதனைகள் ஏராளம். அவைகள் அனைத்தும் காலம் கடந்தும் பேசும். அதுபோல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏராளமான சாதனைகளை செய்து வருகிறார். மகளிருக்கு இலவச பஸ் பயணம், உரிமை தொகை , விவசாயத்திற்கு தனி பட்ஜெட் என மக்கள், விவசாயிகளுக்கு பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி சாதனை புரிந்து வருகிறார்.

தமிழ்நாட்டைப் பற்றி மக்கள் புண்படும் விதமாக தமிழக கவர்னர் தொடர்ந்து பேசி வருகிறார். பிரதமர் பெயருக்கு அவ்வப்போது ஓரிரு திருக்குறளைப் பேசுகிறார். இதை வைத்து தமிழ் தொன்மையான மொழி என பிரதமரே பேசிவிட்டார் என விளம்பரம் செய்கின்றனர்.

தமிழ் தொன்மையான மொழி என்பது இவர்கள் பேசித்தான் தெரிய வேண்டும் என்ற நிலை தமிழ்நாட்டு மக்களுக்கு இல்லை. நம் மக்களுக்கு முன்பே தெரிந்த விஷயம் அது. ஆனால், தமிழுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை விட யாருக்கும் தெரியாத சம்ஸ்கிருத மொழிக்கு 22 மடங்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்கு எந்த வகையிலும் நிதி கொடுக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் மத்திய அரசு உள்ளது. தமிழ்நாட்டிடமிருந்து ஜிஎஸ்டிஉள்பட அனைத்து வரிகளையும் வாங்கிக் கொள்ளும் மத்திய அரசு, திரும்பக் கொடுப்பதற்கு மனசு இல்லை. நல்லாட்சி செய்து வரும் தமிழ்நாடு தண்டிக்கப்படுகிறது. ஆனால், நல்ல ஆட்சி செய்யாத உத்தர பிரதேசத்துக்கு 5 மடங்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு இத்தனை முறை வந்தாலும், புயல் மழையால் பாதிக்கப்பட்ட சென்னை, தென் மாவட்ட மக்களுக்கு ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் தமிழக முதல்வர்தான் உதவிக்கரம் நீட்டினார். தமிழ்நாட்டு மக்களைப் பற்றி பிரதமர் கவலைப்படுவதில்லை.

தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. அரசு எதுவும் செய்யவில்லை. ஆனால், செய்ததாகக் கணக்கு காட்டுவதற்காக ரூ. 7 ஆயிரம் கோடிக்கு பிரதமர் அடிக்கல் நாட்டிச் சென்றார்.

இந்த மண்ணின் பண்பாடு, கலாசாரம், மொழி உள்பட அனைத்தையும் காத்து நிற்கும் அரணாக தி.மு.க உள்ளது. திராவிட மண்ணில் மத அரசியலுக்கும், தமிழ் துரோகிகளுக்கும் இடமில்லை. நாடாளுமன்ற தேர்தல் வெறும் அரசியல் வெற்றிக்கானது மட்டுமல்ல; நம்முடைய எதிர்காலம், இந்த நாட்டின் அமைதியைப் பொருத்து இருப்பதால், அதைக் காக்கும் கடமை நமக்கு இருக்கிறது என மனதில் கொண்டு வாக்களிக்க வேண்டும் .

இவ்வாறு அவர் பேசினார்.

# எதிர்க்கட்சிகள் இருக்க கூடாது என்று பிரதமர் மோடி நினைக்கின்றார்: அமைச்சர் கீதாஜீவன் கடும் தாக்கு

கோவில்பட்டி, மார்ச். 5

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, பட்ஜெட் மற்றும் தி.மு.க. அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழகம் மற்றும் தி.மு.க.வின் வரலாறு தெரியாமல் சிலர் பேசி வருகின்றனர். வீடு இல்லாதவர்களை கண்டறிந்து, 8 லட்சம் பேர் அடையாளப்படுத்தப்பட்டு, அவர்களில் இந்த ஆண்டு ஒரு லட்சம் பேருக்கு மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பெயரில் தொடங்கப்பட்டுள்ள கனவு இல்லம் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட உள்ளன.




இந்த திட்டம் மத்திய அரசின் திட்டம் என்று அண்ணாமலை கூறுகிறார். யாரோ பெத்த பிள்ளைக்கு பெயர் வைப்பது உங்கள் பழக்கம், கருணாநிதியின் கனவு இல்லம் திட்டம் என்பது தமிழக அரசின் நிதி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு பழைய திட்டங்களுக்கு புதிய பெயர்களை வைத்துள்ளது. வரலாறு திருத்தப்படுகிறது. வரலாற்றை மாற்றி அழிக்கப்படுகிறது. மகாத்மா காந்தியை நாம் மகான் என்கிறோம். ஆனால் அவர்கள் வேறு கதை சொல்கின்றனர். பொய் சொல்லி, பிரிவு ஏற்படுத்தி, நம்மை ஏமாற்ற நினைக்கின்றனர். இங்குள்ள மக்கள் யாரும் ஏமாறமாட்டார்கள்.

எதிர்க்கட்சிகள் இருக்க கூடாது என்று பிரதமர் மோடி நினைக்கின்றார். தி.மு.க.வை மோடி மட்டுமல்ல, உங்க அப்பன் வந்தாலும் அழிக்க முடியாது. மக்களுக்கான அத்தனை திட்டங்களையும் கொண்டு வந்தது தி.மு.க. கல்வி கடன், விவசாய கடன், மகளிர் கடன் ஆகியவற்றை ஒன்றிய அரசு தள்ளுபடி செய்யவில்லை. தமிழக அரசு கூட்டுறவு சங்க கடன்களை ரத்து செய்துள்ளது. தேர்தல் பத்திரம் மூலமாக பா.ஜ.க. பெரும் ஊழல் செய்துள்ளது. 90 சதவீத நிறுவனங்கள் பா.ஜ.க.விற்கு தேர்தல் நிதி கொடுத்துள்ளது. கொரோனா தடுப்பூசி தயாரித்த ஜூரம் நிறுவனம் மட்டும் 300 கோடி ரூபாய் பா.ஜ.க.விற்கு நிதி அளித்து உள்ளது.

மோடி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது. இந்த தேர்தல் மிக முக்கியமான தேர்தல். ஜனநாயகம் வெற்றி பெற இந்தியா கூட்டணி மத்தியில் ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# 72 பெண்களுக்கு இருசக்கர வாகனம்: 520 பேருக்கு உதவித்தொகை: உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மார்ச். 5

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா தமிழகம் முழுவதும் கட்சியினரால் கொண்டாடப்பட்டு வருகிறது.

தி.மு.க.வினர்பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள். சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "மக்களின் முதலமைச்சரின் மனித நேய திருவிழா" என்ற தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா நடைபெற்றது.



விழாவில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு 72 தி.மு.க. மகளிருக்கு இரு சக்கர வாகனம், 520 தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு உதவித்தொகை, 520 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை போன்றவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப்சாமுவேல், மேயர் பிரியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் தொடர் கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் கைது

குள்ளனம்பட்டி, மார்ச். 5

திண்டுக்கல் மாலப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் மணிகண்டன். இவர் திண்டுக்கல் பஸ் நிலையம் அருகே திருவள்ளுவர் சாலையில் வீட்டு உபயோக பொருட்கள் கடை வைத்து நடத்தி வந்தார். இந்த நிலையில் இவர் கடந்த 14ந் தேதி காலை வழக்கம் போல் கடையை திறக்கச் சென்றார். அப்போது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் கடைக்குள் சென்று பார்த்த போது நள்ளிரவில் மர்ம நபர்கள் கடையின் பூட்டை உடைத்து கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்தை திருடி சென்றது தெரியவந்தது. அதே போல் மணிக்கூண்டு அருகே செல்போன் கடையில் ரூ.5 ஆயிரம் திருடு போயிருந்தது. இது குறித்து வடக்கு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.



இதையடுத்து திண்டுக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரதீப் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய தனிப்படை போலீசாருக்கு உத்தரவிட்டார். அதன் பேரில் ஏ.எஸ்.பி. சிபின் மேற்பார்வையில், போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடாசலபதி, சப் இன்ஸ்பெக்டர்கள் ராஜகோபால், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்கள் வீரபாண்டி, ஜார்ஜ் எட்வார்டு போலீசார் ராதாகிருஷ்ணன், முகமது அலி, விசுவாசம், சக்திவேல் ஆகியோர்கொண்டதனிப் படை அமைக்கப்பட்டது.

இந்ததனிப்படை போலீசார் திருட்டு நடந்த கடைகள், சாலைகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்களின் பதிவுகளை ஆய்வு செய்தனர்.

அதில் கரூர் கல்லுமடையைச் சேர்ந்த அஜய் (வயது 24), ராயனூரைச் சேர்ந்த ஹரிஹரன் (21), வெங்கமேடு பகுதியை சேர்ந்த மாரிமுத்து (21), கோவை சாய்பாபா காலனியை சேர்ந்த சத்தியசீலன் (23) ஆகியோர் 2 கடைகளிலும் திருடியது தெரிய வந்தது. இதை தொடர்ந்து அவர்கள் 4 பேரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தியதில் இவர்கள் பழனி ஆயக்குடியில் 2 ஸ்டுடியோக்களில் பூட்டை உடைத்து 3 விலை உயர்ந்த கேமராக்களை திருடி சென்றதும் தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் திருடிய பணம், 3 கேமராக்கள், 3 செல்போன்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் அஜய், ஹரிகரன், மாரிமுத்து, சத்தியசீலன் ஆகிய 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# போதைப்பொருள் குறித்து விழிப்புணர்வு வீடியோ வெளியிட்டார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, மார்ச். 5

தமிழகத்தில் போதைப் பொருட்கள் கடத்தலை தடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் மாவட்ட தலை நகரங்களில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அ.தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, போதைப்பொருள் குறித்து விழிப்புணர்வு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருள் புழக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தத் தவறிய விடியா திமுக அரசைக் கண்டித்தும் நாளை அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அதிமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.




நாளைய போராட்டத்தோடு நிச்சயமாக இது நின்றுவிடப்போவதில்லை. தமிழ்நாட்டில் கடைசி துளி போதைப் பொருள் ஒழியும் வரை எங்களுடைய போராட்டம் தொடரும்.

பெற்றோர்களே... இந்த விடியா ஆட்சியில் தமிழ்நாடு போதைப்பொருள் கிடங்காக மாறி வருகிறது. நம் பிள்ளைகளை நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும். கவனமாக இருங்கள்.

மாணவச் செல்வங்களே, இளைய சமுதாயமே உங்கள் எதிர்காலம் மிக முக்கியம். ஒரு சிறிய தவறு கூட பெரிய தண்டனைகளை பெற்றுத் தந்துவிடும் என்று கூறி விழிப்புணர்வு வீடியோவை அவர் வெளியிட்டுள்ளார்.

# கண்டா வர சொல்லுங்க... திருப்பூர் தொகுதி எம்.பி.யை கலாய்த்து ஒட்டப்பட்ட போஸ்டரால் பரபரப்பு

அம்மமாபேட்டை, மார்ச்.5

திருப்பூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருப்பவர் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்தநிர்வாகிசுப்புராயன்.

இவர் கடந்த முறை திருப்பூர் பாராளுமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் இரட்டை இலை சின்னத்தில் நின்ற ஆனந்தனை எதிர்த்து கதிர்அருவாள் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார்.

மீண்டும் தி.மு.க. கூட்டணியில் திருப்பூர் தொகுதி கம்யூனிஸ்டுக்கு ஒதுக்குவதாக பரபரப்பான தகவல்கள் பரவி வரும் நிலையில் அதே இடத்தில் சுப்புராயன் நிற்பதாக தகவல் வெளியாகி வருகிறது.

இந்நிலையில் கடந்த முறை வெற்றி பெற்று அம்மாபேட்டை சுற்றுவட்டார பகுதிக்கு ஓரிரு வரை மட்டுமே வந்துள்ளதாகவும், மக்களின் குறைகேட்டு நிவர்த்தி செய்ய வந்ததில்லை எனவும் அரசியல் வட்டாரங்கள் பரபரப்பாக பேசி வருக்கின்றனர்.




இந்தநிலையில்திருப்பூர் பாராளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அந்தியூர், பவானி சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அம்மாபேட்டை, நெரிஞ்சிப்பேட்டை, ஒலகடம், பூதப்பாடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் "கண்டா வர சொல்லுங்க" எங்கள் தொகுதி எம்.பி.யை எங்கேயும் காணவில்லை இப்படிக்கு திருப்பூர் பாராளுமன்ற தொகுதி மக்கள் என போஸ்டர் அடித்து ஒட்டப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பெரும்பரபரப்பு நிலவி வருகிறது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

5.3.2024



# மஞ்சும்மல் பாய்ஸ்ஐ பாராட்டிய 'சியான்' விக்ரம்

சமீபத்தில் வெளியாகி கேரளாவில் பெரும் ஆதரவு பெற்ற மஞ்சும்மல் பாய்ஸ் படம் தமிழ்நாட்டிலும் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டு மக்களிடமும் பெரும் ஆதரவு மற்றும் வரவேற்பை பெற்ற இந்த படத்தை பரவா பில்ம்ஸ் நிறுவனம் தயாரித்தது.

இதில் ஷோபின் ஷஹிர், ஸ்ரீநாத் பாஷி, பாலு வர்கீஸ் போன்ற முன்னணி கதாப்பாத்திரங்கள் நடித்த படத்தை மலையாள இயக்குனர் சிதம்பரம் இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன்பு "ஜான்இமான்"படத்தை இயக்கியுள்ளார்.

இப்படத்திற்கு சுஷின் ஷியாம் இசையமைத்துள்ளார். இந்நிலையில், மஞ்சும்மல் பாய்ஸ் படம் வெளியாகி 4 நாட்களில் 40 கோடி வசூலித்து கேரளா சினிமாவில் சாதனைப் படைத்துள்ளது. தமிழ்நாட்டிலும் இப்படம் பெரும் வசூலினை பெற்று வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் சினிமா முன்னணி பிரபலங்களான நடிகர் விக்ரம், நடிகர் தனுஷ், இயக்குனர் கார்த்தி சுப்பராஜ், நடிகர் சித்தார்த், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இப்படத்தை பார்த்து படகுழுவினரை நேரில் அழைத்து பாராட்டியுள்ளனர். இப்படத்தில் கமல் நடித்த குணா படத்தில் உள்ள கண்மணி அன்போடு காதலன் என்னும் பாடல் இப்படத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதனால் மீண்டும் இப்பாடல் சமூக வலைதளங்களில் ட்ரெண்டாகியுள்ளது. இதையொட்டி மார்ச் 1 ஆம் தேதி நடிகர்கமல்ஹாசன்,மஞ்சும்மாள்பாய்ஸ்படக்குழுவினர் அனைவரையும் அவரின் அலுவகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி, குணா படத்தின் போது ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.




# 'இம்சை அரசன்' படம் வெளியாக கருணாநிதி தான் காரணம்



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா சென்னை பெரவள்ளூர் அகரத்தில் நடந்தது. விழாவுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்தார். இதில் நடிகர் வடிவேலு கலந்து கொண்டு பேசியதாவது:

நான் இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால் கலைஞர் நினைவிடம் சென்று வந்தேன். திராவிடம் என்றால் என்னவென்று கேட்பவர்கள் ஒரே ஒருமுறை கலைஞர் நினைவிடம் சென்று பாருங்கள். உள்ளே போனால், அங்கிருக்கும் காட்சிகளை கண்டால், எனக்கு மூச்சு நிற்கும் அளவுக்கு கருணாநிதியின் வரலாறை முதலமைச்சர் மிகச்சிறந்த அளவில் உருவாக்கியுள்ளார். வரலாற்றில் இப்படி ஒரு மணிமண்டபத்தை கட்ட யாராலும் முடியாது. யாருக்கும் கிடையாது.

நான் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகன் என்ற போதிலும் கலைஞர் கருணாநிதியின் தீவிர பக்தன், தீவிர விசுவாசி. எம்.ஜி.ஆரை நான் வெளியே இருந்துதான் பார்த்திருக்கிறேன். எம்.ஜி.ஆர் கருணாநிதி 2 பேரும் நண்பர்கள்தான். ஆனால் கலைஞரின் கதை வசனத்தில் நடித்திருக்கிறேன். அவருடன் அமர்ந்து பேசியிருக்கிறேன். பழகியிருக்கேன். நிறைய விஷயங்களில் கலைஞர் எனக்கு தைரியம் சொல்லுவார். திரை உலகத்தை அவர் எந்தளவுக்கு நேசித்தார் என்பது எல்லா மக்களுக்கும் தெரியும்.

23 ஆம் புலிகேசி படத்தை என்னால் ரிலீஸ் செய்ய முடியவில்லை. கலைஞரின் உதவியாளர் சண்முகநாதனுக்கு போன் செய்து கலைஞரிடம் பேச வேண்டும் என சொன்னேன். உடனே என்ன வென்று பேசினார். நான் உங்களை பார்க்க வேண்டுமென சொன்னேன். எதுவும் பிரச்சினையா? என கருணாநிதி கேட்டார். புலிகேசி படத்தை ரிலீஸ் செய்ய விடமாட்டேன் என்று சொல்கிறார்கள். ராஜா குதிரை போக விடமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஏதோ புளூ கிராஸ் அமைப்பில் பஞ்சாயத்து ஆகிவிட்டது என நான் விஷயத்தை சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், 'ராஜா குதிரையில் போகாம குவாலிஸ்லயா போவார்?' என பதிலடியாக பேசினார்.

பின்னர் நான் கருணாநிதியை சந்திக்க நேரில் சென்றேன். கிட்டதட்ட 22 நிமிடம் இதற்காக பேசினார். பின்னர் உதவியாளர் சண்முகநாதனை கூப்பிட்டு ஆ.ராசாவுக்கு போன் செய்ய சொன்னார். அவரிடம், 'ராஜா குதிரை போகக்கூடாதுன்னு சொல்கிறார்களாம். உடனே நீ போற மாதிரி ஏற்பாடு பண்ணிரு. நீயும் ராஜா தானே'என கலாய்த்து பேசிவிட்டு போனை வைத்து விட்டார்.

அதன்பின்னர் என்னை பார்த்து, 'இப்படித்தான் உன் எம்.ஜி.ஆர்.'என பேச ஆரம்பித்ததும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இப்படித்தான் எம்.ஜி.ஆர். நடித்த காஞ்சித்தலைவன் படம் பண்ணும்போது அதில் புலிகேசி மன்னனாக எம்.ஜி.ஆர். வருவார். அப்போதும் இதே மாதிரி பிரச்சினை வந்தது. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. காட்சியை தூக்கி விட்டோம். அதன்பிறகு இப்போது இந்த பட பிரச்சினை வந்துள்ளது. கண்டிப்பாக இந்த படம் வெளியாகும் என தைரியம் கொடுத்தார். ஒருவாரத்தில் இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி படத்தை ரிலீஸ் செய்ய வைத்தவர் கலைஞர் கருணாநிதி தான். இவ்வாறு அவர் பேசினார்.



# மகன் திருமணம் விழா: நடனமாடி அசத்திய நீதா அம்பானி

ரிலையன்ஸ்நிறுவனஅதிபர்முகேஷ்அம்பானிநீதாதம்பதிகளின்இளையமகன்ஆனந்த்அம்பானிராதிகாமெர்ச்சன்ட் திருமணம் வருகிற ஜூலை 12 ந்தேதி நடக்கிறது. இந்த திருமணத்தை முன்னிட்டு குஜராத் ஜாம்நகரில் ரிலையன்ஸ் கிரீன்ஸ் வளாகத்தில் 3 நாட்கள் முக்கிய பிரமுகர்களுக்கு விருந்து நிகழ்ச்சி நடந்தது. இவ்விழாவில் பாலிவுட் பிரபலங்களின் கலைநிகழ்ச்சிகளில் ஏராளமான நட்சத்திர நடிகர்கள் பங்கேற்றனர். இதில் இந்திபட சூப்பர் ஸ்டார்கள் ஷாருக்கான், சல்மான்கான் மற்றும் அமீர்கான் கலந்து கொண்டு ஒரே மேடையில் நடனம் ஆடினார்கள். நேற்று 3 வது நாளாகநடந்த விருந்துநிகழ்ச்சியில் நடிகர்ரஜினிகாந்த், அவரது மனைவி லதாரஜினிகாந்த் மகள்ஐஸ்வர்யாபங்கேற்றனர். இந்நிலையில் முகேஷ் அம்பானியின் மனைவி நீதா அம்பானி தனது மகன் ஆனந்த் திருமண விழாவில் காஞ்சிபுரம் பட்டுப்புடவை அணிந்து கலந்து கொண்டார். அதை தொடர்ந்து இந்தி படத்தின் பக்தி பாடல் ஒன்றுக்கு அவர் நடனமாடினார். தனது மகன் மற்றும் மருமகளின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையும் வகையில், மனதார வாழ்த்துவது போல, இப்பாடலும், நடனமும் அமைந்திருந்தது. இந்த காட்சிகள் 'எக்ஸ்' வலைத்தளத்தில் வைரலாகியது.

# நயன்தாரா, விக்னேஷ் சிவன் இடையே பிரிவா?



நடிகை நயன்தாரா தமிழ்பட உலகின் முன்னணி நடிகையாக திகழ்கிறார். ரசிகர்களால் 'லேடி சூப்பர் ஸ்டார்' என்று அழைக்கப்படும் நயன்தாரா 75 வது படமான 'அன்னபூரணி' படத்தில் நடித்து இருந்தார். இந்த படம் நயன்தாராவுக்கு ஏமாற்றம் கொடுத்தது. தற்போது மண்ணாங்கட்டி உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். இயக்குநர் விக்னேஷ்சிவனை காதலித்து திருமணம் செய்துகொண்டபின்குடும்பத்துடன் நேரம் செலவிடுவதில் கவனம் செலுத்தி வரும் நயன்தாரா, தனது 2 மகன்களை அன்போடு வளர்ப்பதிலும் தீவிரம் காட்டி வருகிறார். இந்நிலையில் இன்ஸ்டாகிராமில் விக்னேஷ் சிவனை நயன்தாரா 'அன்பாலோ' செய்துவிட்டார் என்ற தகவல் காட்டுத்தீ போல பரவியது. இதனால் 2 பேரும் பிரிகிறார்கள் என்று கூறப்பட்டது. ரசிகர்களிடையே இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் விக்னேஷ் சிவன் தற்போது 'இன்ஸ்டாகிராம்' பக்கத்தில் ஒரு 'போஸ்ட்' போட்டிருக்கிறார். அதில் தனது 9 ஸ்கின் நிறுவனத்துக்காக தான் போஸ் கொடுக்கும் புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இதனால், விக்கியும், நயன்தாராவும் பிரிகிறார்கள் என்பது வதந்தியா அல்லது இருவரும் பிரிவது உண்மையா என்பது தெரியாமல் குழப்பத்தில் உள்ளனர் ரசிகர்கள்.

# இணையத்தில் வைரலாகும் 'எனக்கொரு WIFE வேணுமடா'


பத்திரிகையாளர் ஜியாவின் 'எனக்கொரு WIFE வேணுமடா' குறும்படம் *Film Dude* யூடியூப் சேனலில் வெளியானது. செபாஸ்டின் அந்தோணி, அக்ஷயா, அனகா, வினிதா, மோனிகா நடித்துள்ள இந்த குறும்படத்தை பிலிம் வில்லேஜ் சார்பில் அமோகன் தயாரித்துள்ளார். கதை, திரைக்கதை, வசனங்களை எழுதி, இசையமைத்து ஜியா இயக்கியுள்ளார். இது முழு நீள ஹியூமர் டிராமாவாக உருவாகியுள்ளது. கடந்த ஆண்டு ஜூனில் 'கள்வா' என்ற ரொமான்டிக் திரில்லர் குறும்படத்தை ஜியா இயக்கியிருந்தார். இது அவரது 2வது குறும்படமாகும். அபிஷேக் ஒளிப்பதிவு செய்துள்ளார். பர்ஸ்ட் லுக் வெளியானதிலிருந்து இந்த குறும்படத்துக்கான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவி வந்தது. இந்நிலையில் *Film Dude* யூடியூப் சேனலில் 'எனக்கொரு WIFE வேணுமடா' வெளியாகியுள்ளது. 10 நிமிடங்கள் ஓடும் இந்த குறும்படம், யூடியூபில் டிரெண்டாகி வருகிறது.

# 10 விக்கெட்டுகள் வீழ்த்தி பல சாதனைகள் படைத்த நாதன் லயன்



நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் ஆஸ்திரேலிய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையேயானமுதலாவதுடெஸ்ட்போட்டிவெலிங்டனில்நடைபெற்றது.இப்போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 383 ரன்களைச் சேர்த்து ஆல் அவுட்டானது. இதையடுத்து விளையாடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 179 ரன்களைச் சேர்த்தது. அதன்பின் 204 ரன்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலியா 164 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. நியூசிலாந்து அணிக்கு 370 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி 196 ரன்களில் ஆல் அவுட் ஆகி 172 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இந்நிலையில் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் பல சாதனைகளை படைத்துள்ளார். அவர் முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டும் 2வது இன்னிங்சில் 6 விக்கெட்டும் கைப்பற்றி ஆக மொத்தம் 10 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். நியூசிலாந்தில் 10 விக்கெட்டுகளை வீழ்த்திய 10வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். நியூசிலாந்துக்கு எதிராக 10 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் லயன் ஆவார். இதை தவிர நியூசிலாந்து மண்ணில் 2006க்கு பிறகு 10 விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் பந்து வீச்சாளர் இவர் ஆவார். மேலும் ஒருசாதனையாக அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்த வீரர் பட்டியலில் வெஸ்ட் இண்டீஸ் வீரரை பின்னுக்கு தள்ளி 7வது இடத்தை நாதன்லயன் பிடித்துள்ளார். லயன் 521 விக்கெட்டுகளுடன் கர்ட்னி வால்ஷ் 519 விக்கெட்டுகளுடன் 8வது இடத்திலும் உள்ளனர். இந்த பட்டியலில் இந்திய அணி வீரர் அனில் கும்ளே 619 விக்கெட்டுகளுடன் 4வது இடத்தில் உள்ளார். முதல் இடத்தில் இலங்கை ஜாம்பவான் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுகளுடன் யாரும் தொட முடியாத இடத்தில் இருக்கிறார்.

# எங்கள் அணியின் கேப்டன் கம்மின்ஸ்: சன்ரைசர்ஸ் ஐதராபாத் அறிவிப்பு




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்று சன்ரைசர்ஸ் ஐதராபாத். கடந்த 2023 சீசனில் அந்த அணியின் கேப்டனாக தென்ஆப்பிரிக்காவின் எய்டன் மார்கிராம் செயல்பட்டார். இவரது தலைமையில் அந்த அணி சிறப்பாக செயல்படவில்லை.

இந்த நிலையில் 2024 சீசனுக்கான அணியின் கேப்டன் பெயரை அறிவித்துள்ளது. ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரும், அந்த அணியின் கேப்டனுமான பேட் கம்மின்ஸ் கேப்டனாக செயல்படுவார் என சன்ரைசர்ஸ் ஐதராபாத் தெரிவித்துள்ளது.

பேட் கம்மின்ஸை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 20.5 கோடி ரூபாய் கொடுத்து ஏலம் எடுத்தது. ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் போன 2வது வீரர் இவராவார்.

பேட் கம்மின்ஸ் இதற்கு முன்னதாக கொல்கத்தா நைட் ரைடரஸ், டெல்லி டேர்டெவில்ஸ் அணிகளுக்குகாக விளையாடியுள்ளார். இவரது தலைமையில் ஆஸ்திரேலியா அணி 50 ஓவர் உலகக் கோப்பை மற்றும் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஆகியவற்றை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐபிஎல் 2024 சீசன் வருகிற 22ந்தேதி தொடங்குகிறது. சன்ரைசர்ஸ் ஐதராபாத் தனது முதல் போட்டியில் மார்ச் 23ந்தேதி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொள்கிறது. மார்ச் 17ந்தேதி மும்பை இந்தியன்ஸ் அணியையும், மார்ச் 31ந்தேதி குஜராத் டைட்டன்ஸ் அணியையும் எதிர்கொள்ள இருக்கிறது.

# ரஞ்சி கோப்பை: தமிழ்நாட்டிற்கு எதிரான அரையிறுதி போட்டியில் சதம் விளாசினார் ஷர்துல் தாக்கூர்

ரஞ்சிடிராபி அரையிறுதி ஆட்டங்கள் தொடங்கின. மும்பையில் தொடங்கிய 2வது அரையிறுதியில் தமிழ்நாடு, மும்பை அணிகள் விளையாடி வருகின்றன. டாஸ் வென்ற தமிழ்நாடு பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி தமிழ்நாடு அணி முதலில் களமிறங்கியது. அதில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த தமிழ்நாடு அணி முதல் இன்னிங்சில் 146 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

மும்பை அணியின் துஷார் தேஷ்பாண்டே 3 விக்கெட்டும், ஷர்துல் தாக்குர், முஷீர் கான், தனுஷ் கோட்டியான் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் மும்பை அணி தனது முதல் இன்னிங்சில் களமிறங்கியது. தமிழக பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சால் மும்பை அணி ஒரு கட்டத்தில் 106 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்தது. அப்போது களமிறங்கிய ஷர்துல் தாக்கூர் தனது அதிரடி ஆட்டத்தால் 89 பந்துகளில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். பின்னர் 104 பந்துகளில் 109 ரன்கள் எடுத்த நிலையில் குல்தீப் சென் பந்துவீச்சில் ஷர்துல் தாக்கூர் ஆட்டமிழந்தார்.

தற்போது வரை, 322 ரன்களுக்கு 9 விக்கெட்டுக்களை மும்பை அணி இழந்துள்ளது. இதன் மூலம் மும்பை அணி 176 ரன்கள் முன்னிலையில் உள்ளது. தமிழ்நாடு தரப்பில் கேப்டன் சாய் கிஷோர் 6 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.




# பெண்கள் பிரீமியர் லீக்: குஜராத்தை 25 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தியது டெல்லி கேப்பிட்டல்ஸ்

பெண்கள் பிரீமியர் லீக்கில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில்டெல்லிகேப்பிட்டல்ஸ்குஜராத்டைட்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.


முதலில் விளையாடிய டெல்லி கேப்பிட்டல்ஸ் 8 விக்கெட் இழப்பிற்கு 163 ரன்கள் குவித்தது.

அந்த அணியின் தொடக்க வீராங்கனையும், கேப்டனுமான லேனிங் 41 பந்தில் 55 ரன்கள் சேர்த்தார். அலிஸ் கேப்சி 17 பந்தில் 27 ரன்களும், சதர்லேண்டு 12 பந்தில் 20 ரன்களும் அடித்தனர். குஜராத் டைட்டன்ஸ் வீராங்கனை மேக்னா சிங் 4 ஓவரில் 37 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகள் சாய்த்தார்.

பின்னர் 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய குஜராத் அணி 53 ரன்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது.

ஆஷ்லே கார்டனர் 31 பந்தில் 40 ரன்கள் அடித்தார். என்றாலும் குஜராத் டைட்டன்ஸ் அணியால் 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 138 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் டெல்லி கேப்பிட்டல்ஸ் 25 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணியின் ஜெஸ்ஜோனாஸ்சன் 3 ஓவரில் 22 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகள் சாய்த்தார்.

இந்த வெற்றியின் மூலம் டெல்லி கேப்பிட்டல்ஸ் 4 போட்டிகள் முடியவில் 3ல் வெற்றி பெற்று புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது. மும்பை இந்தியன்ஸ் 2வது இடத்தையும், உ.பி. வாரியர்ஸ் 3வது இடத்தையும் பிடித்துள்ளன.



**முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்**

**விளக்கம்:**

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக்கூறும்தன்மையில் உள்ளதே அறமாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.